**செய்தி வெளியீடு எண்: 648** **நாள்:29.10.12**

# <u>பத்திரிகைச் செய்தி</u>

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களது அறிவுரைகளுக்கிணங்க, மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்** திரு. B V ரமணா அவர்கள் 29.10.2012 அன்று சென்னையில் வணிகவரித்துறை இணை ஆணையர்களின் பணித்திறனை ஆய்வு செய்தார். அவ்வமயம் திரு. சுனில் பாலிவால், இ.ஆ.ப., செயலர், வணிக வரிகள் மற்றும் பதிவுத் துறை மற்றும் டாக்டர். கே. மணிவாசன், இ.ஆ.ப., வணிக வரி ஆணையர் ஆகியோர் உடனிருந்தனர். மேலும், ஆய்வின்போது கூடுதல் ஆணையர்களும் பங்கேற்றனர்.

ஆய்வின்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 2012 செப்டம்பர் மாதத்தில் ரூபாய் 3,873.36 கோடிகள் மொத்த வரியாக வசூலிக்கப்பட்டது எனவும், இவ்வருவாயானது சென்ற ஆண்டின் இதே மாதத்தில் ஈட்டப்பட்ட வரி வருவாயான ரூபாய் 3,321.97 கோடிகளை ஒப்பிடுகையில் 16.60 சதவீத வளர்ச்சி விகிதத்தினை பிரதிபலிக்கிறது எனக் குறிப்பிட்டார்கள். மேலும், இவ் வருட முதல் அரையாண்டில் ரூ.23,142 கோடிகள் வரி வசூலிக்கப்பட்டுள்ளது எனவும், இத்தொகை கடந்த ஆண்டில் இதே கால கட்டத்தில் வசூலிக்கப்பட்ட ரூபாய் 18,331 கோடிகளை ஒப்பிடும்போது 26.24% வளர்ச்சி விகிதத்தை காட்டுகிறது என தெரிவித்தார்கள். மேலும், அனைத்து அலுவலர்களும் அயராது பணியாற்றி எதிர்வரும் காலங்களில் அதிக வரி வசூல் செய்திட வேண்டுமென அறிவுறுத்தினார்கள்.

மேலும் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வணிகவரித் துறையின் சோதனைச் சாவடிகளை நவீனமயமாக்கும் பொருட்டு இந்நிதியாண்டில் ரூபாய் 33.36 கோடிகள் வழங்கியமையை மாண்புமிகு அமைச்சர் எடுத்துரைத்து, அதனின் பணி முன்னேற்றத்தினையும், மற்றும் ரூபாய் 20.15 கோடி பொருட்செலவில் வணிகவரித்துறை அலுவலகங்களுக்கு கட்டப்பட்டு வரும் புதிய கட்டடங்களின் பணி முன்னேற்றத்தினையும் ஆய்வு செய்தார்கள்.**

**வரி ஏய்ப்பினை தடுக்கும் பணி மற்றும் வரி செலுத்துவதை முறைப்படுத்தும் பணியில் செயலாக்கப் பிரிவின் முக்கியத்துவத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துரைத்து, கடந்த செப்டம்பர் 2012 மாதம் முடிய செயலாக்கப் பிரிவினரால் சோதனைச் சாவடிகளில் வாகனத்தணிக்கை வாயிலாக ரூபாய் 19 கோடி ஈட்டப்பட்டுள்ளதாகவும், ரூபாய் 21 கோடி சுழலும் படையினரால் வசூல் செய்யப்பட்டுள்ளதையும் எடுத்துரைத்தார்கள். மேலும் வாகன தணிக்கையினை செம்மையாக செயல்படுத்தி வெளிமாநிலங்களுக்கு வரி செலுத்தாமல் பொருட்கள் எடுத்து செல்வதினை தடுக்க வேண்டும் என அறிவுறுத்தினார்கள். மேலும் கணினி மூலம் மாதாந்திர நமூனாக்கள் தாக்கல் செய்து வரி செலுத்துபவர்களின் எண்ணிக்கையை அதிகரித்து அரசுக்கு உரிய** நேரத்தில் வரியை செலுத்த வியாபாரிகளுக்கு உரிய ஆலோசனை வழங்க வேண்டும் என்றும் அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கினார்கள்.

ஆய்வின் முடிவில், வரி நிர்வாகத்தை செம்மைபடுத்தவும், நிர்ணயித்துள்ள இலக்குகளை அடைந்திடவும், துறை அலுவலர்கள் தங்களது முழுத் திறனையும் வெளிப்படுத்தி திறம்பட செயலாற்றிட வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

**வெளியீடு:-**

**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**